## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 39/2015 | வா.சா | 1 |
| பெயர் : | சோலையம்மாள் | க/பெ | ராஜேந்திரன் |
| தாலுகா : | நத்தம் | கிராமம் | ஏரக்காபட்டி |
| தேதி : | 27.03.2026 | வயது | 50/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :

**<u>5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

9) இவ்வழக்கில் 6ம் பிரதிவாதியான மணி என்பவரது பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை ஆட்சேபித்து பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் தாக்கல் செய்த பிராதிலோ, நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலோ வழக்கில் எங்குமே வழக்கு சொத்துக்கள் எனது தாயாரின் அனுபவத்தில் இருந்தது என்று வாதங்கள் முன்னிடப்படவில்லை என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் வழக்கு சொத்துக்கள் இருந்தது என்று எங்குமே குறிப்பிடப்படாத நிலையில் கூட்டு அனுபவத்தில் இருந்தது போன்று நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. எனது தாயார் பிராதில் 39 வருடங்களுக்கு முன்பே தனக்கு திருமணம் ஆகி விட்டதாக தெரிவித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) வழக்கு சொத்துக்களுக்கு கிஸ்து வரி ரசீது அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் உள்ள கிஸ்து ரசீது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் பாகம் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்து என்பதால் எனது தாயார் பெயரில் தனி கிஸ்து ஆவணம் ஏற்படவில்லை. வழக்கில் எதற்காக எனது தாயார் பெயரில் கிஸ்து வரி ரசீது ஏற்படவில்லை என்பது குறித்து விளக்கம் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் ஒன்றாவது லக்க சொத்தில் இருந்து எவ்வளவு வருமானம்

வந்தது என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான், வருமானங்கள் கொடுக்காததால் தான் எனது தாயார் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் இரண்டாவது லக்க சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் ஆனது ரூ.2000/- கிரைய தொகைக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. 1வது இலக்க சொத்தில் கண்ட 4, 5வது வரிசை சொத்துக்களை எனது கணவர் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், எனது கணவரும், 5ம் பிரதிவாதியும் சொத்துக்களை கிரையம் செய்து கொடுக்கிறார்கள், எனது தாயாருக்கு மேற்படி சொத்துக்களில் உள்ள பாகத்தை கேட்டுதான் எனது தாயார் வழக்கு தாக்கல் செய்தார்.

11) பிராது மற்றும் எனது பிரமாண வாக்குமூலத்தில் ஐந்தாம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளதாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மற்றும் ஐந்தாம் பிரதிவாதி விற்றதாக சொல்லப்படும் சொத்துக்களை வாங்கிய நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும், அதனால் மேற்படி கிரயங்களை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை என்றாலும் சரியல்ல. தற்போது எனது வழக்கை வழக்கறிஞர் திரு.K.மூர்த்தி அவர்கள் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான், எனது தாயாருக்கும் அவர்தான் வழக்கை நடத்தி வந்தார் என்றால் சரிதான். ஐந்தாம் பிரதிவாதி ராமன் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.116/2006 வழக்கில் இவ் வழக்கில் கண்ட மற்ற பிரதிவாதிகளான 1 முதல் 4 மற்றும் 6 ஆகியோருக்கு வழக்கறிஞர் திரு.K.மூர்த்தி அவர்கள் தான் வழக்கை நடத்தினார் என்றால் சரிதான். மேற்படி ஐந்தாம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த வழக்கில் எனது தாயார் நல்லம்மாள் வழக்கறிஞர் திரு.K.மூர்த்தி அவர்கள் மூலமாக தனக்கும் சொத்துக்களில் பாகம் உள்ளது என்று தெரிவித்து மனு தாக்கல் செய்தார் என்றாலும், அந்த மனு தள்ளுபடி ஆனது என்றாலும் சரிதான். மேற்படி மனு தள்ளுபடி ஆனதற்கு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12) மேற்படி முந்தைய வழக்கில் 1 முதல் 4 மற்றும் 6ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்கள் வாய்க்கரால் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றும், அதற்கான தஸ்தாவேஸ்துகள் இல்லை என்றுதான் எதிர்வாதம் செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி முந்தைய வழக்கில் 30.06.2009ம் தேதியில் 5ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு பிறகுதான் தாவா இந்த வழக்கு எனது தாயாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. ஏற்கனவே தகுதி வாய்ந்த நீதிமன்றத்தினால் வழக்கு சொத்துக்கள் குறித்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதே சொத்துக்களை பொறுத்து மீண்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளதானது சட்ட விதிகளின்படி நிலைநிறுத்ததக்கதல்ல என்றால் சரியல்ல.

13) 5ம் பிரதிவாதியின் சொத்துக்களை மட்டும் பொறுத்து பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எனது கணவர் வகையறாக்கள் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக பாகப்பிரிவினை கோரப்படாததால் பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதிக்கு அழகு நாச்சி என்ற மனைவியும், இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். மகன்களில் குமார் என்பவர் இறந்து விட்டார் என்றாலும், அவருக்கு ஒரு மனைவி மற்றும் மகன் வாரிசுதாரர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். அழகு நாச்சி என்பவர் எனது தாயாரின் முதல் கணவருக்கு பிறந்த ஒரே மகள் என்பதால் மேற்கண்ட வாரிசுதாரர்களும் இந்த வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றாலும் அவர்களை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு அவசிய தரப்பினர் சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல.

14) 1ம் வாதியின் திருமணத்தின்போது அவரது தகப்பனார் சீர்வரிசை எதுவும் செய்யாமல் பின்னாளில் சொத்து பாகம் பிரித்து கொடுப்பதாக

சொல்வதற்கு ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது தாயாருக்கு பிராது தாக்கல் செய்வதற்கு 39 ஆண்டுகளுக்கு முன்பாகவே திருமணம் நடந்ததாக பிராதில் தெரிவித்துள்ள நிலையில், அதற்கு பின்னிட்டு அவரது சகோதரர்கள் செய்து கொண்ட வாய்க்கரால் பாகத்தையோ, அதனடிப்படையில் செய்து கொண்ட கிரையத்தையோ சட்ட காலத்திற்குள் ஆட்சேபிக்காததால் இந்த வழக்கு காலவரையறை சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தாக்கல் செய்த முந்தைய வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்ட நிலையில் தோல்வியுற்ற தரப்பினரான எனது கணவர் வகையறாக்கள் எனது தாயாரை தூண்டிவிட்டு தாயார் பெயரில் எனது கணவர் வகையறாக்கள் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு உரிய சட்டப் பிரிவின் கீழ் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படாத காரணத்தினாலும், உரிய சட்டப் பிரிவின் கீழ் சொத்துக்கள் மதிப்பிடப்படாத காரணத்தினாலும் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது செய்த பந்தக பாராதீனங்களை ஆட்சேபிக்காத நிலையில் எனது கணவருக்காகதான் இந்த வழக்கு நடந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு அதிகப்படியான செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. மற்ற வாதிகள் யாருக்கும் இந்த வழக்கு பற்றி தெரியாது என்றாலும், அவர்களுக்கு தெரியாமல் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 27.03.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.27 16:42:14 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்